ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

SRI VAISHNAVAN.

ஸ்ரீ வைஷ்ணவன்.

உண்மையறிவை உணர்த்தும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

" எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு "

தொகுதி 6.	1106-ம் ௵ பிரமோதூத ௵ தை ௴	பகுதி 3.

நம்மாழ்வார் வணக்கம்

பல்லான ஐந்து நவலட்சமாயப் புவிற
பறவை யீரைந்து லட்சம
பதினொரு லட்சமா யூர்வனத் துற்றபின்
பன்னிரண்டே மரங்கள்
பொல்லாத மரைகளிற் பத்து மூன்ருய் பின்
புவிதனில் மனித நான்காய்ப்
போகின்ற தரிதனைற் போந்திருந்தாலு நற்
புநித மறையோர்களாகச்
செல்லாத காயஞ் செனித்த பின்னுயினுஞ்
திருநாம வைபத்தைச்
செய்யவே தெரியாது மருளு தென்னைய நின்
திருவடிக்காட் கொள்ளுவாய்
செல்லாரு தண்டலையின் முட்புறக் கனியினற்
செந்தேனொழிந்து பாயுந்
திரைபொருவு பொருநை யிருக்கரை மருவுகுருகை வரு
திருமருவு மகிழ்மாறனே.

ஸ்ரீ

நாஸ்திக வாத மறுப்பு.

அற்புதமான கருவிகளோடு அமைந்த நம் சரீர யந்திரம் உண்டுபண்ணப்படுகிற முறையை ஆய்ந்து ஆய்ந்து அறிந்ததின் முடிவாக ஆதிகாலத்தில் மக்களின் உற்பத்திக்கு ஆண் சரீரமும் பெண்சரீரமும் கூடிய ஓர் மூலமூர்த்தி யிருப்பது அவசிய மெனவும், அம்மூலமூர்த்தியே லக்ஷ்மீநாராயணரெனவும், அவரே ஆதி முதல்வனெனவும், கடவுளெனவும் முன்னர் கூறினோம். இனி அக்கடவுளை மக்களது மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐம் புலன்கட்கும் புலப்படாதகாரணத்தால் அவர் இல்லையெனக் கூறும் சில நண்பர்களது வாதத்தைக் கவனிப்போம்.

இக்காலத்தில் கடவுளை நேரில் கண்டவரில்லை. அவரது திருவாய்மொழியைக் கேட்டவருமில்லை. மற்றப்புலன்களாலும் அவரை அறிந்தவர் கிடையாது. ஆகவே கடவுள் மக்களது ஐம்புலன்களாலும் அறியப்படாதவர் என்பது உண்மையே. ஆனால் கடவுளைப் போல் மக்களால் அறியப்படாத பொருள்கள் பல இருக்கின்றன. உதாரணமாக ஒருவன் வானத்தை நோக்குகிறான். அங்கே சூரியன் சந்திரன்முதலிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் காணப்படுகின்றன. ஆனால் அக்கிரகங்களிடத்தும் நக்ஷத்திரங்களிடத்தும் என்னென்ன பொருள்கள் அடங்கியிருக்கின்றன வென்பதை இவனால் அறிந்து கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணமென்ன? இக்கிரகாதிகள் கோடிக்கணக்கான மைல்களுக்கப்பால் வெகு தூரத்தில் இருக்கின்றபடியால் அவைகளின் விவரங்களையறிய மக்களது கண்களுக்கு வசதி ஏற்படவில்லை. இதற்காக மக்கள் தூரதிருஷ்டிக்கண்ணாடியை உபயோகித்து இக்காலத்தில் சில நுணுக்கங்களை அறிந்துவருகிறார்கள்.

விஞ்ஞான சாஸ்திரப்படி சூரிய வெளிச்சக் கதிர்களாலேயே பொருள்களின் வடிவம் கண்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. இக்கதிர்கள் இல்லாவிட்டால் எதிரிலிருக்கும் சாமானகூட கண்களுக்குத் தெரியாது. இரவு நேரங்களில் கண்களால் அறிதல் குறைப

திருப்பதே இதற்குத் தக்க சான்றாகும். சமுத்திர ஜலத்திற்குள்ளிருக்கும் பொருள்கள் மக்களது கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. சமுத்திரம் நெருங்கிய ஜல அணுக்களால் நிரம்பி யிருப்பதால் சூரிய கிரணங்கள் ஜலத்தைப் பிளந்து செல்லமார்க்கமில்லை. ஆகவே சமுத்திரத்திற்குள்ளிருக்கும் பதார்த்தங்களை மனித கண்களுக்கு வெளி யேற்படவில்லை. ஆனால் இப்போது சில கருவிகளின் உதவியாகக் கொண்டு சமுத்திரத்திற்குள்ளிருக்கும் மலை, பாறை முதலிய பொருள்களை மக்கள் அறிந்து வருகிறார்கள்.

கண் முதலிய புலன்களின் அசக்திக்கு இன்னும் சில உதாரணங்கள் கூறுவாம். ஒரு பாத்திரத்திலுள்ள சுத்த ஜலத்தில் எவ்வளவோ கிருமிகள் நிறைந்திருக்கின்றன. ஆகாயத்திலும் எவ்வளவோ கிருமிகள் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. இவைகள் மக்களது கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. இதற்குக் காரணமென்ன? இக்கிருமிகள் மிகமிகச்சிறிய உருவத்துடனிருப்பதால மக்களது கண்களால் அறியக்கூடவில்லை. இக்காலத்தில் மக்கள் பூதக்கண்ணாடியை உபயோகித்து இவைகளை அறிந்துவருகிறார்கள். இதன்றி மக்களின் ஐம்புலன்கட்கும திரியக் ஸ்தாவரங்களின் ஐம்புலன்கட்கும மிகுந்த வித்தியாசமுளது. பாம்பு, பூனை, ஆந்தை முதலிய ஜந்துக்களுக்கு இரவில் நன்றாய்க் கண் தெரிகின்றது. நாய் முதலிய ஜந்துக்களுக்கு மக்களைக் காட்டிலும மோப்ப உணர்ச்சி அதிகமாயிருக்கின்றது. ஒரு நாயைக் கண்ணைக்கட்டி இருநூறு மைல்களுக்கப்பால் கொண்டுபோய் விட்டுவிட்டால் அந்நாய் தன் மோப்ப உணர்ச்சியால் கடந்த வழியைக் கண்டுபிடித்து தன்னிருப்பிடத்தை யடைகின்றது. இவ்விதமே ஓர் புறாவையும் கூண்டிலடைத்து மறுதேசம் கொண்டுபோய் கூண்டைத் திறந்து விட்டுவிட்டால அது வேகமாய்ப் பறந்து தன்னிருப்பிடத்தை யடைகின்றது. இவ்விதம் ஜீவராசிகளின் புலன்கள் அவைகளின் திறமைகள் அவ்வவைகளின் சரீரத்தைப் பொறுத்து பல் வேறு விதமாயமைக்கப் பெற்றிருக்கின்றன. இப்புலன்களால் சில வஸ்துக்களை அறியக்கூடும்; சில வஸ்துக்களை அறிய இயலாது. இவ்வுதாரணங்களை ஆராய்ந்துபார்க்கின் புலன்களால் அறியமுடியாத காரணத்தால் பொருள்களை இல்லையெனக் கூறுதல் பொருந்தாதென்பது தெளிவாய் விளங்குகிறதல்லவா?

மேலும் தரையில் ஊரும் எறும்பு, புழு முதலிய சிறு பூச்சி கட்கு ஐம்புலன்களும் பொருந்தியிருந்தாலும் அவைகள் எல்லாப் பொருள்களையும் அறிகிறதில்லை. மக்கள், ஆடு, மாடு, வீடு, ஆலயம்; கோபுரம், அக்கினி முதலிய பொருள்களையும் அவைகளின் இயல்புகளையும் இப்புழுக்கள் அறிந்துகொள்ளாமலே தத்தம் சோலியைப் பார்த்துவருகின்றன. இதற்குக் காரணம் யாது? இப்பூச்சிகட்குப் போதிய அறிவில்லாதபடியால் இப்பொருள்களை யறியும் ஆற்றல் இல்லை. ஆகவே பொருள்களையறிதற்கு அறிவு அவசியமென்பது தெளிவாயிற்று. மக்கள் பூச்சிகளைக் காட்டிலும் சிறந்த அறிவுடையவர்களே. ஆதலால் அவர்கள் பல சிறப்பட்ட பொருள்களைப் புலன்களால் உணர்ந்து பல அற்புதங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆயினும் கடவுளையறிதற்கு மக்களின் அறிவு காணமாட்டாது. புழு, எறும்பு முதலிய பூச்சிகட்கு உலகினையறிவது எப்படி அசாத்தியமோ அதுபோலவே மக்களுக்குக் கடவுளையறிவது அசாத்திய மாகும்.

மேலும் கடவுள் ஞானமயமாகவும் அன்புமயமாகவும் விளங்குகிறார். ஞானமும் அன்பும் முற்றிய மக்கள் கடவுளை நேரில் பார்க்கலாம். அவரிடம் சம்பாஷணை செய்யலாம். அவரது திவ்விய குணாம்ருதத்தைப் பருகிக் களிக்கலாம். ஞானத்திற்கும் அன்பிற்கும் விசேஷ சக்திகளுண்டு. ஞானிகள் புலன்களின் உதவியில்லாமலே தங்கள் ஞானக்கண்ணினால் பல விஷயங்களை அறிந்துகொள்வார்கள். சூரியப்பிரகாசம் போல் ஞானம் விரியும் தன்மை வாய்ந்தது. ஆனால் சாதாரண மக்கட்கு ஞானம் விரிதலின்றி பந்தபாசத்தால் மறைப்புண்டு கிடக்கின்றது. அன்பினாலும் யோகாப்பியாச முதலிய சாதனங்களினாலும் மக்கள் ஞானத்தை விகசிக்கச்செய்யலாம். ஞானம் விரியும்போது புலன்களுக்கெட்டாத பல அபூர்வ விஷயங்கள் ஆத்மாவின் அனுபவத்திற்கு சாத்தியமாகும். அன்பு என்பது அகத்திலுண்டாகும் ஓர் விசித்திரக்கனிவு. இவ்வன்பிற்கு கவர்ச்சி செய்யும் தன்மை இயற்கையிலேயே அமைந்துளது. இதனாலேயே அன்பர்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரிய மனமில்லாதவர்களாயிருக்கிறார்கள். ஒருவன் ஓர் குழந்தையிடம் அன்பு செலுத்துகிறான். அக்குழந்தையும் அவனிடம் களிப்போடு விளையாடிக் கொண்டிருக்கிறது. அன்பு செலுத்தாதவனை அக்குழந்தை விரும்பு

கிறதில்லை. இதனால் அன்புக்கு கவர்ச்சிசெய்யும் சக்தி இருக்கிற தென விளங்குகிறதல்லவா? இரும்பும் காந்தமும் நெருங்கியவிடத்து எப்படி ஒன்றுசேருகின்றதோ அதுபோன்று அன்பும் அன்பும் ஒன்றுசேருவது இயல்பாயிருக்கின்றது. நாய், பூனை, கிளி, புறு, மான், பசு, ஆடு முதலிய பிராணிகள்கூட அன்பு செலுத்தும் எஜமானர்களை விட்டுப் பிரிகிறதில்லை. இவ்விடத்தில் பிராணிகளின் அன்பும் எஜமானர்களது அன்பும் ஒன்றுசேருகிறது. இத்தால் அன்பைக்கொண்டு அன்புள்ள எல்லா ஜீவராசிகளையும் வசப்படுத்த முடியுமென்பது விளங்குகிறது. ஆகவே அன்பு சொரூபமாயிருக்கிற கடவுளை அன்பால் வசப்படுத்த முடியுமென்பது தெளிவு. இது பற்றியே பகவானை "பத்துடையடியவர்க் கெளியவன்" என ஸ்ரீ நம்மாழ்வார் அருளிப்போந்தார்

அன்பர்களே! யாம் இதுகாறும் கூறியவாற்றால் கடவுள் மக்களது புலன்களுக்குப் புலப்படாத காரணத்தால் அவரில்லையெனக் கூறுவது முற்றிலும் தவறு என்பதும் அவர் ஞானமும் அன்பும் நிரம்பியவரானபடியால் ஞானத்தினாலும் அன்பினாலும் அவரை அறியலாமென்பதும் இங்ஙனம் விளக்குவதாயிற்று.

ப—ர்.

ஸ்ரீ வைஷ்ணவ தர்மம்.

ஆசார்ய பக்தி.

பிரபல ஸ்ரீ வைஷ்ணவ சமயாசாரியர்களில் ஸ்ரீ ஆளவந்தார் என்பார் ஒருவர். இவர் சகல சாஸ்திர பாரங்கதர். மிக்கவாக்கு வன்மையுடையவர். இவர் நாடும் நகரும் சுற்றித்திரிந்து பல அரிய சொற்பொழிவுகளைச் செய்து ஸ்ரீ வைஷ்ணவ தரிசனத்தை நடப் பரப்பிக்கொண்டு வந்தார். ஓர் நாள் இவர் பல சிஷ்யர்களோடு பயணகதியாக ஓர் நகருக்குச் செல்லும்போது வழியில் கழனியை உழுது கொண்டிருந்த ஓர் பஞ்சமனைக்கண்டார். அப்போது கதிரவன் நடு வானில் காய்ந்துகொண்டிருந்ததால் பஞ்சமனுக்குப் பசிமேலிட்டு

உழுத வயலிலுள்ள சேறுந் தண்ணீருமான மண்ணை அள்ளியள்ளிப் புசித்துந் தன் வயிற்றை நிரப்பினான். அதைக்கண்டு ஆளவந்தார் அச்சர்யமுற்று அப்பஞ்சமனை அழைத்து "அப்பா! பசியை ஆற்றுதற்கு அன்ன பானாதிகளிருக்க நீ இம்மண்ணைப் புசிப்பானேன்?" எனக்கேட்க, அப்பஞ்சமன் ஸ்வாமி! அன்ன பானாதிகட்கும் இம்மண்ணிற்கும் என்ன வித்யாசமிருக்கிறது; உண்மையில் இவ்விரண்டிற்கும் யாதொரு தாரதம்யத்தையும் அடியேன் கண்டிலேன் எனப் புகன்றான். ஆளவந்தார் இதனைக் கேள்வியுற்றதும் பஞ்சமனுடைய மதிநுட்பத்திற்கு வியந்து அப்போதே அவனுக்கு மாறனேர் நம்பி எனத் தாஸ்யநாமமிட்டு அவனைத் தனக்கு முக்கிய சிடனாக்கி தன்கோஷ்டியில் சேர்த்துக்கொண்டார். அதுமுதல் மாறநேர் நம்பியும் ஆளவந்தாரை விட்டுப் பிரியாமல் அவரது திவ்யானுபவங்களிலும், அமிர்த மாரியான சொற்பொழிவுகளிலும் ஈடுபட்டுப் பரவசராய்க் காலத்தைக் கழித்துவந்தார்.

இவ்விதம் சில வருடங்கள் கழிய ஒரு காலத்தில் ஆளவந்தார் பெரிய ராஜ ரணத்தால் பிடிக்கப்பட்டு மிகவுந் துன்பமுற்றார். அவரது சாஸ்திர ஆராய்ச்சி தடைப்பட்டது. சொற்பொழிவு முதலிய பிரசார வேலைகள் நின்று போயிற்று. இதனால் ஆளவந்தார் மிகவும் மனமுடைந்து ஓர் நாள் சிடர்கள் நிரம்பிய தன் கோஷ்டியை நோக்கி சிடர்காள்! யான் சொஸ்தமுறும்படியாக என் வியாதியை ஏற்றுக்கொள்ள உங்களில் யாராவது சம்மதிக்கிறீர்களா? எனக் கேட்க எல்லோரும் தலை குனிந்து மௌனம் சாதித்தனர். ஆனால் தூரத்தில் ஒதுங்கியிருந்த மாறனேர் நம்பிமட்டும் சடக்கென எழுந்து கை கட்டி வாய்புதைத்து நின்று கொண்டு ஸ்வாமிகளே! ஆசாரியப்பிரசாதமான அந்த வியாதியை ஏற்றுககொள்ள அடியேன் காத்திருக்கிறேன் என உரக்கக் கூறினான். உடனே ஆளவந்தார் சில மந்திரங்களை ஜபிக்க, ராஜரணம் மாறனேர் நம்பியின் முதுகை யடைந்தது.

பின்னர் மாறனேர் நம்பி ராஜ ரணத்தால் மிகவும் துன்புற்று சரீரம் தளர்ச்சியடைந்து தனது உண்டி முதலிய காரியங்களைக்கூட கவனிக்க சக்தியற்றவரானார். இவரைப் பராமரிப்பவர் வேறு எவருமில்லை. இப்பரிதாப நிலையை ஆளவந்தாரின் மற்றொரு முக்கிய சிடரான பெரியநம்பிகள் உணர்ந்து மாறனேர் நம்பியின் ஆசார்

யபக்தியை மதித்து அவருக்கு உதவி புரிவதையே தனது கடமை யாகக் கொண்டு பிரதிதினம ஸ்ரீ ப்ரசாதத்தோடு அவர் குடிசைக்குச் சென்று அவரை ஸ்நானஞ் செய்வித்து அமுதூட்டி வந்தார். ஒரு நாளிரவில் பெரிய நம்பிகள் பிரசாதத்தோடு மாறனேர் நம்பின் குடிசைக்குச் செல்வதை பெரிய நம்பிகளின் சிஷ்யரான இராமாநுசர் பார்த்து ஆ! ஆ! இவ்விரவில் நம் ஆசாரியர் தனிமையாய்ச் செல்கின்றார் இவருக்கு ஏதாவது தீங்கும் நேரிடாமற் காப்பது நமது கடன் எனச் சிந்தித்து பெரிய நம்பிகளுக்குத் தெரியாமல் அவரைப்பின் தொடர்ந்து சென்றார். சில நிமிஷங்களில் பெரிய நம்பிகள் மாறனேர் நம்பியை ஸ்நானம் செய்விப்பதையும், அவர் ரணத்திலிருந்த கிருமிகளை அப்புறப்படுத்தி சுத்தம்செய்விப்பதையும், பின்னர் ஆடைகளை யணிவித்து அவருக்குப் பிரசாதம் ஊட்டுவதையும் இராமாநுசர் பார்த்து மாறனேர் நம்பியின் ஆசார்ய பக்தியையும் பெரிய நம்பிகளின் மனப்பான்மையையும் கண்டு பிரமித்து உளங்கசிந்து உருகி ஆ! ரெங்கநாதா! உமக்குக் கிருபையில்லையா? ஆசார்யனையே தெய்வமாகக் கருதும் பரமபாகவதோத்தமரான மாறனேர் நம்பிக்கு இத்தகைய கஷ்டத்தைக் கொடுக்கலாமா? இதற்காகப் பெரியநம்பிகள் எவ்வளவு கஷ்டப்படுகின்றார்? என்று தனக்குள்ளே சொல்லி முணுமுணுத்துக் கொண்டார். இராமாநுசர் இவ்விதம் முணு முணுத்துத் திருப்பவளவாய் மூடுமுன் மாறனேர் நம்பியின் திருமேனியிலிருந்த ராஜரணம் மாயமாய் மறைந்து போயிற்று. பொன்னிறம் போல் அவரது திருமேனி பொலிந்து விளங்கியது. இதைக் கண்ணுற்றதும் மாறனேர் நம்பிக்கும் பெரிய நம்பிகட்கும் நடந்த சம்பாஷணை பின் வருமாறு;

மாறனேர் நம்பி:— அந்தோ! ஸ்வாமிகளே! ஆசார்யர் அனுக்கிரகித்த மகாப் பிரசாதத்தை அடியேன் இழந்துவிட்டேனே! இதென்ன மாயம்! இதைக்காட்டிலும் பெருந்துக்கம அடியேனுக்கு வேறு உளதோ?

பெரிய நம்பிகள்:— ஸ்வாமிகளே! சஞ்சலம் வேண்டாம். எல்லாம் பகவத் சங்கற்பம் என்பது உமக்குத்தெரியாதா?

மாறனேர் நம்பி:— பகவான் இத்தகைய கொடுந்தீமையை அடியேனுக்குச் செய்ய ஒருப்பட்டார். ஆசார்யப் பிரசாதத்தை அடியேன் இது காறும் சிரோ பூஷணம போல் அணிந்து வந்தேன்

அதைத் தேனும் பாலும் கன்னலும் அமுது மொத்துத் திருப்தியாய் அனுபவித்து வந்தேன். அந்தப்பாக்கியம் இப்போது அடியேனை விட்டு விலகிப்போயிற்று. தேவரீர் அடியேனுக்குக கைங்கர்யம் புரிந்ததாலேயே இந்நஷ்டம் அடியேனுக்கு லபித்ததென நினைக்கிறேன்.

பெரிய நம்பிகள்:-- திருந்திய ஞானம் படைத்த பெரியீர்! அடியேனது விண்ணப்பத்திற்கு சற்று செவிசாய்த்தருளவேண்டும். பல நாட்களாய் அடியேன் இங்கு வந்து கைங்கர்யம் புரிகின்றேன். இதுகாறும் எவ்வித சம்பவமும் நிகழவில்லை. ஏதோ இன்று ஆகஸ்மாத்தாய் இக்கார்யம் நிகழ்ந்திருக்கிறது. இதற்கு அடியேன் ஜவாப்தாரியல்ல. தேவரீரது ரணத்தைப் போக்கவேணுமென அடியேன் ஓர் சிறிதும் சிந்தித்ததில்லை.

மாறனேர் நம்பி:-- ஸ்வாமி! தேவரீரைத்தவிர இங்கு ஒருவரும் வரவில்லையல்லவா? அவ்விதமிருக்க அடியேன் வேறு யார் மீது சந்தேகிக்கக் கூடும்; ஆதலால் தேவரீரே இதற்குக் காரணபூதரென்பது நிச்சயம். ஏதோ அடியேனது கெட்ட காலம் தேவரீர் திருவுள்ளம் இவ்விதமிருந்தது. அடியேனுக்குக்கைங்கரியம் பண்ணுவது போல் பாவனை காட்டி அடியேனது பெரும பாக்கியத்தை இழக்கும்படி செய்துவிட்டீர். இனி அடியேன் உயிர் வாழ்வதில் பயனில்லை. இப்பொழுதே இக்கல்லில் மோதி பிராணனை விட்டு விடுகிறேன்.

இச்சம்பாஷணையை மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த இராமாநுசர் திடுக்கிட்டு ஆ! ஆ! இப்பெரியோர்களின் மகிமையை உணராமல் அறியாத்தனமாய் யான் ரெங்கநாதனைப் பிரார்த்தனை செய்து இத்தொல்லைகளை வரவழைத்துவிட்டேன். இன்னும் சற்று நேரம் சும்மாயிருந்தால் மாறனேர் நம்பி பிராணனை விட்டு விடுவார் போல் காணப்படுகிறது. இம்மஹா பாதகத்திற்குப் யாம். ஏன் ஆகவேண்டும்? என நினைந்து உடல் நடுங்கக் கண்ணீர் சொரிய மாறனேர் நம்பிக்குப் பழைய ரணத்தைக் கொடுத்து ரக்ஷிக்கவேணுமென ரெங்கநாதனைப் பிரார்த்தனை செய்தார். அந்த நிமிடமே மறைவுற்றிருந்த ராஜரணம் மீண்டும் மாறனேர் நம்பியை வந்தடைந்தது. மாறனேர் நம்பி தனது உயிரினும் இனிய ஆசார்யபிரசாதம்

மீண்டும் தனக்கு லபித்ததை நோக்கி அகமகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். இவ்வதிசயத்தைக் கண்ணுற்ற பெரியநம்பிகள் ஒன்றும் தோன்றாமல் பிரமைகொண்டு இதற்குக் காரணபூதர் யார் எனத் தெரியும்பொருட்டு சடக்கென வெளியே வந்து பார்க்கும்போது ஆஜாநுபாகுவாயும், அதிசுந்தரராயும், பரமதயாளுவாயுமிருக்கிற இராமாநுசர் திரிதண்டத்தை ஹஸ்தத்தில் எடுத்துக்கொண்டு சந்திரப்பிரகாசத்தில் காவிவேஷ்டி பிரகாசிக்க ஓடுவதைக்கண்ணுற்று இவரே மாறனேர் நம்பியின் ரணத்தைப்போக்க அரங்கநாயகனைப் பிரார்த்தித்தவராக வேணுமென நிச்சயித்து மீண்டும் மாறனேர் நம்பியையடைந்து தான் கண்ட காக்ஷியை விண்ணப்பம் செய்தார். மாறனேர நம்பியும் அடியேனுக்காக மகாநுபாவரான இராமாநுசர் இரங்கியது சரியே, ஆயினும் ஆசார்யன் அனுக்கிரகித்த பிரசாதம் அடியேனுக்கு உத்கிருஷ்டமானபடியால் அடியேன் துக்கித்தேனென்று விண்ணப்பஞ்செய்து தாம் குறைகூறி அபசாரப்பட்டதை மன்னிக்கும்படி பெரியநம்பிகளைக் கேட்டுக்கொண்டார்.

ஆழ்வார்கள் கவியமுதம்.

அன்பால் வருந்திய மூன்று பெண்கள்.

(முன் 13-ம் பக்கத் தொடர்ச்சி.)

தோழி:—அம்மணி! கட்டுவிச்சி கூறிய வார்த்தைகளை முழுவதும் நம்பலாகாது. மேலும் "எம்பெருமான் திருவரங்கம் எங்கே" என்று உங்கள் மகள் கூறிய வார்த்தையிலிருந்து அவளைப் பகவானிடம் மயக்கங்கொண்டவளாகக் கருதுதலும் சரியன்று. ஒருக்கால் அவ்விதமிருந்தாலும் சிறுமிகட்கு இவ்விஷயத்தில் அடிக்கடி மனமாறுதல் ஏற்படக்கூடும். ஆதலால அவளுடைய பேச்சு வார்த்தைகளையும் செயல்களையும் பன்முறை கவனித்து அவள் இருதயத்தைச் சோதிக்கவேண்டும்.

தாயார்:— அடி, பைத்தியமே! நீ மற்ற சிறுமிகளைப்போல் இவளை நினைத்துப் பேசுகிறாய். பகவானிடத்தில் கொண்ட அன்பு

நோயே இவளைத் தாக்கி வருத்துகிறது. இதில் ஓர் சிறிதும் சந்தேகமில்லை. ஓர்நாள் இவள் முழுமூடாறு செய்து பகவானுடைய திருநாமங்களைக் கூவியழைத்து சோகித்துக் கீழே விழுந்தாள். எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்தும் இவளைச் சமாதானப்படுத்த முடியவில்லை. அப்போது நான் "பத்துடையடியவர்க்கெளியவனை பார்தாமன் அன்பால்மெலிந்து வருந்தும உனக்கு ஏன் கருணை காட்டவில்லையென காட்டார பரிகசிக்கின்றார்களே; அப்படிப்பட்ட தெய்வத்தினிடம் உனக்கேனிந்த மயக்கம்" எனக் கூறினேன். இவ்வார்த்தை அவள் செவியில் விழுந்ததும் அவள் செய்த காரியம் பின்வருமாறு;

பொங்கார் மென்னிளங்கொங்கை பொன்னேபூப்பப்
பொரு கயற்கண்ணீரரும்பப் போர்த்துநின்று
செங்கால மடப்புறவம பெடைக்குப்பேசும்
சிறுகுரலுக்குடலுருகிச்சிந்தித்து, ஆங்கே
தண்காலும் தண்குடந்தைநகரும பாடி
தண்கோவலூர்பாடி யாடக்கேட்டு
நங்காய் நங்குடிக்கிதுவோநன்மை யென்ன
நறையூரும பாடுவாள் நவில்கின்றாளே.

திடீரென எழுந்து அகத்தினின்றும் வெளிப்போந்து வீதியில் வந்து நின்றாள். திரண்டு உருண்டு பருத்த மென்மையான அவளது இளங்கொங்கைகள் நிறங்குன்றி பசலையடைந்தது. கொங்கைகள் இந்நிலையாயின் அவளது மற்ற அவயவங்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? எல்லாம் பொலிவிழந்து பசலைபூத்தன. கண்களில் நீர்பெருகி வழிந்தன. அப்போது ஓர் காட்சி நிகழ்ந்தது. சிவந்த கால்களையுடைய ஓர் மாடப்புறா தன் பெட்டைக்கிரங்கிப் பேசும் சிறிய குரலைக் கேட்டாள். ஆ! ஆ! அச்சமயம் அவள் பட்ட பாட்டை என்னென்று கூறுவேன்! அப்புறாக்களைக் கண்டதும் அவள் உள்ளம உருகிக்கரைந்தது. உடம்பு சிலிர்த்தது. எதையோ சிந்தித்து கைபவள்போல் சில நிமிடங்கள் பிரமைகொண்டு நின்று பின்னர் சில பாடல்களைப் பாடலானாள்.

தோழி:— அம்மா! நீங்கள் கூறுவது வியப்பாயிருக்கிறது. உங்கள் மகளுக்கும் புறாக்களுக்கும் என்ன சம்பந்தம்? புறாக்களைக் கண்டதும உங்கள் மகள் மனங்கசியக் காரணமென்ன?

தாயார்:— கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவப்ராணிகளில் புறாக்கள் பறவையினத்தைச் சார்ந்தவை. அறிவில் மக்களைக் காட்டிலும் புறாக்கள் எவ்வளவோ தாழ்ந்தவைகளல்லவா? அவ்விதமிருந்தும் பறவைகளிலும் நாயகநாயகிகளின் அன்பு காணப்படுகிறது. ஆண்புறா தன் பெட்டைக்கிரங்கி கண்டத்வனி செய்வதை இவள் அறிந்ததும் ஓர்புறாவே தன் பெட்டைக்கிரங்கும்போது சர்வஜீவதயாபரனாகிய எம்பெருமான் தனக்கு இரங்காமலிருப்பானோ? எவ்விதமும் தனக்கு அருள்புரிவானென்ற நம்பிக்கை ஏற்பட்டு உடனே அவன் எழுந்தருளியிருக்கும்படியான திவ்விய தேசங்களைப் பாடலானாள்.

தோழி:—அம்மணி! உங்கள் மகள் எந்தெந்த திவ்விய தேசங்களைப் பாடினாள்? சொல்லுங்கள் கேட்கட்டும்.

தாயார்:—அன்று திருத்தண்காலையும், திருக்குடந்தையையும் திருக்கோவலூரையும் பாடி நர்த்தனம்பண்ணினாள்.

தோழி:—என்ன வியப்பு! எம்பெருமான் அர்ச்சாமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங்கள் எவ்வளவோ இருக்கும் பொழுது இம்மூன்று மட்டும் உங்கள் மகள் கவனத்திற்கு வரக்காரணமென்ன? இதைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?

தாயார்:—ஆம் தோழி! இதற்குச் சில காரணங்களிருப்பதாக நான் கருதுகிறேன். இவள் பகவானது தரிசனம் கிடைக்காமல் வாடி வருந்திருக்கிறாளல்லவா? மகளது துன்பத்தையும் வாட்டத்தையும் தீர்ப்பது குளிர்காற்று. திருத்தண்கால் என்ற திருநாமத்திற்கு குளிர்காற்று எனப் பொருள்படுகின்றமையால் அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் அவ்வூரின் திருநாமத்திற்கேற்ப திருவுள்ளங்குளிர்ந்து இரக்கச் சித்தமுடையவனாயிருப்பானென்பது இவள் அபிப்பிராயம் போலும். அக்காரணம் பற்றியே இவள் திருத்தண்காலைச் சிந்தித்திருக்கலாம்.

தோழி:—சரி, இருக்கட்டும். திருக்குடந்தையைப்பற்றி என்ன அபிப்பிராயப்படுகின்றீர்கள்.

தாயார்:—திருக்குடந்தை எம்பெருமான் திருமழிசையாழ்வாருக்கு அருள்புரிந்தவரல்லவா? திருமழிசையாழ்வார் திருக்குடந்தையில் சயனித்திருந்த எம்பெருமானை நோக்கி "குடந்தைந

கிடந்தவாறு எழுந்து பேசு" என விண்ணப்பம் செய்ய, எம்பெருமான் ஆழ்வாருடைய வார்த்தையை மதித்து தன் திருமுடியை நிமிர்த்து எழுந்திருக்கப்போகையில் ஆழ்வார் எம்பெருமானுடைய சௌலப்யத்தைக்கண்டு மகிழ்ந்து மெய்சிலுர்த்து தன் வலக்கரத்தைத் தூக்கி வாழி வாழியென்று மங்களாசாஸனம் செய்தருளினர். அதுமுதல் இதுகாறும் அவ்வெம்பெருமான் நிமிர்ந்துகிடத்தலாகவே சேவை தந்துகொண்டிருக்கிறார். இத்தகைய பக்தவத்ஸலனை ஆராவமுதனைத் தியானித்தால் சீக்கிரம் தனது அபீஷ்டம் கைகூடுமென்பது இவள் அபிப்பிராயம் போலும்.

தோழி:—சரி! திருக்கோவலூரைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொடுக்கிறீர்கள்?

தாயார்:— திருக்கோவலூரில் ஓர்நாளிரவு முதலாழ்வார் மூவர்களும் மழைக்கொதுங்கி ஓர் ஒட்டுத்திண்ணையில் நின்று கஷ்டமுறும்போது அதுபொறுமல் அவ்வூர் எம்பெருமான் தானும் அவர்களுக்கிடையே நுழைந்து ஒன்றிநின்று அருள்செய்த ஸ்தலமல்லவா? ஆதலால் அந்த ஸ்தலத்தைப் பாடினால் எப்பெருமானது அருள் எளிதில் கிடைக்குமென்று இவள் கருதினள்போலும்.

தோழி:— பின்னர் நிகழ்ந்ததென்ன?

தாயார்:—பின்னர் யான் அவளை நோக்கி நங்காய்! நீயோ ரூப சௌந்தர்யங்களிற் சிறந்தவள், அறிவிலும் குணத்திலும் மேம்பட்டவள், அத்தகைய உன்னை விரும்பி அந்த பகவான் ஓடிவரமாட்டாரா? அன்றியும் பெண்கள் தாமாகவே தங்கள் இச்சையைக்காட்டுவது அசங்கியமல்லவா? இது நம் குடிப்பாங்கிற்கு நன்மையாகுமா? பலர் உன்னைப் பார்த்துப் பரிகசிக்கமாட்டார்களா? எனப் பல புத்திமதிகளைச் சொன்னேன். ஆனால் அவள் என் வார்த்தைகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் திருநறையூர் என்ற திவ்விய தேசத்தையும் சேர்த்துப் பாடுவாளாயினள்.

மேற்கூறிய இரண்டு பாசுரங்களையும் அருளியவர் திருமங்கையாழ்வார். இவர் தனது அன்புக்குப் பேர்க்கிடமாக நாயகித் தன்மையை யடைந்து நாயகனைப் பிரிந்து நாயகிபடும் அவஸ்தைகளில் அன்பை விளக்கினர். ஆதலால் இவரை ஓர் பெண்ணாக இங்ஙனம் கூறப்பட்டது. இனி அன்பால் வருந்தும் இரண்டாவது பெண்ணைப்பற்றி ஆராய்வாம்.

ப—ர்.

ஸ்ரீ

ஸ்ரீ ஆண்டாள் பிராட்டியின் அருந்திறன்.

(முன் 32-ம் பக்கத் தொடர்ச்சி.)

திருப்பாவையின் சுருக்கம்.

நம் கோதையார் தன் தோழிகளுடன் சேர்ந்து கண்ணனையடைவதற்கு நோன்பு செய்யத் தொடங்குகின்றார். அதாவது தாங்கள் நினையாமலே தங்கட்கு அமைந்த நன்னாளின் பெருமையைப் பாராட்டி, அதைத் தலைக்கட்டிக் கொடுக்கும் கண்ணனைக் கொண்டாடி மார்கழி நீராட்டத்தில் விருப்பமுடைய பெண்களை வரும்படி அழைக்கின்றார்கள். நோன்பு நோற்கும்போது எவைகளைப் பற்றவேண்டும், எவைகளை விடவேண்டும் எனவும், நோன்பு செய்யும் முறைகள் இவைகள் எனவும் ஏற்பாடு செய்துகொண்டு, நோன்பு நோற்கும்படி நமக்கு அனுமதிகொடுத்த இந்நாட்டார்க்கு மழையின் பலன் கிடைக்கவேண்டுமென பிரார்த்தித்துக்கொண்டு, மழைக்குத் தலைவனாகிய பர்ஜந்யன் இப்பெண்மணிகள் செய்யும் எம்பெருமான் கைங்கரியத்தில் யாமும் சிறிது கலந்துகொள்வது நம் ஸ்வரூபத்திற்குச் சிறப்பெனக்கருதி, அவர் நோன்பிற்காகத் தான் செய்யவேண்டுவது யாது எனக் கேட்க, இந்நாட்டிலுள்ள அனைவரும் மகிழும்படி மழை பெய்விக்க வேண்டுமென அவனுக்குக் கட்டளையிடுகின்றனர். தாங்கள் செய்த பாபத்தினால் தாங்கள் மேற்கொள்ளும் நோன்பு நோற்றலாகிய காரியத்திற்கு இடையூறுகள் நேரினும், எம்பெருமான் திருநாமத்தை வாயினாற்பாடி, மனத்தினால் சிந்திக்கில் அவைகள் யாவும் நீங்கி காரியம் எளிதாக முடியுமென நிச்சயித்துக்கொள்ளுகிறார்கள்.

புள்ளும் சிலம்பினகாண் என்னும் பாசுரம் முதல் எல்லே இளங்கிளியே என்னும் பாசுரம் வரையும் மேற்கூறிய நோன்பில் அநுபோகமுடைய சில தோழிகளை எழுப்புகின்றார்கள். இதைத் திருப்பள்ளி எழுச்சி எனவுங் கூறலாம். இப்பத்து பாசுரங்களின் பொருளும் பத்து ஆழ்வார்களுடைய குணங்களைக் குறிப்பிக்கின்றது. அதாவது பகவத் விஷயத்தில் நெடுநாளாகவே ஆழ்ந்திருக்கும் இப்போது புதுமை பாராட்டுகின்ற ஒருத்தியையும், கண்ண

பிரானுக்கு அந்தரங்க பிரியையாயும், யாவரும் ஒருங்கே வந்தழைக்க வேண்டுமென்றிருப்பாளுமாகிய ஒருத்தியையும், அழகிய தீபங்கள் சுற்றும் பிரகாசிக்க, நல்மணம்வீசாநிற்க, சிறந்த மணிமாடத்தில் மெல்லணை மேற் கண்டுயில்கின்ற மாமன் மகளாகிய ஒருத்தியையும், திருவாய்ப்பாடியிலிருந்த பெண்பிள்ளைகள் அனைவருக்கும் தலைவியாயும், கிருஷ்ணன் பிரிவில் மிக்க அநுதாபமுடையளாயும், கண்ணபிரானால் மிகவும் விரும்பப் படுபவளாயுமிருக்கின்ற ஒருத்தியையும், ஊர்க்கெல்லாம் ஓர் அருமைப்பெண்பிள்ளையாய் தலைவனை நோற்று என்னை யடையட்டும என்றிருக்கின்ற ஒருத்தியையும, இளையபெருமாளைப்போன்று அனவரதமும கண்ணன்மாட்டே பரிவு பூண்டொழுகி அவனையேபின்பற்றித்திரியும ஓர் சிறந்த ஆண்மகனுடைய தங்கையையும, தன் கண்ணழகின் பெருமையைப்பாராட்டி எல்லாரும் தன்னை நோக்கி வரவேண்டுமென நினைத்துக்கொண்டிருக்கின்ற ஒருத்தியையும், ஆய்ச்சியர் கூட்டத்திற்கெல்லாம தலைவியாய் எல்லாரையும தானே வந்து எழுப்புவதாய்க் கூறி அதை மறந்து உறங்குகின்ற ஒருத்தியையும், பெண்கள் யாவருடைய திரட்சியையும் ஒருங்கே காணவேண்டுமென்றிருக்கின்ற ஒருத்தியையும் எழுப்பிக்கொண்டு கண்ணபிரான் அரண்மனையுள்ளே சென்று ஸ்ரீ நந்தகோபரையும், ஸ்ரீயசோதைப் பிராட்டியாரையும், கண்ணபிரானையும் பலதேவரையும் துயிலெழுப்பி, நப்பின்னைப் பிராட்டியையும் எழுப்பி நப்பின்னைப் பிராட்டியின் பெருமையைக் கூறினால் கண்ணன் மனமிரங்குமெனக் கருதி அவருடைய ஆத்ம குணங்களையும், தேகத்தன்மைகளையும வாயாரப்புகழ்ந்து, தங்கள் விருப்பத்தை முடிக்க வேண்டுமென வேண்டுகின்றார்கள். பின் நப்பின்னைப் பிராட்டியும் இவர்களுடன் கலந்துகொள்ள யாவரும் ஒருங்குகூடி கண்ணபிரான் வீரத்தைச்சொல்லிப் போற்றி, வேறொரு புகலிடமுமற்ற எங்களை நீரே கடாக்ஷித்தருள வேண்டுமென பிரார்த்திக்கின்றார்கள். இதை செவிசாற்றிய கண்ணன் இனி உங்கள் காரியத்தை யானே முடித்துத் தருகிறேன், நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம், உங்களுக்கு யான் செய்யவேண்டுவது யாது எனக் கேட்க, நீர், கோஷ்டியில் எழுந்தருளியே எம்முடைய விருப்பத்தை முடிக்க வேண்டுமெனவும், அங்ஙனம் எழுந்தருளுவதற்கு முறையின்னதென்றுங்கூறி, அங்ஙனம் எழுந்தருளிய எம்பெருமானின் ஸௌலட்சணியத்தைப் பார்த்தவுடனே, இவ்வழகிய திருவடிகளைக்கொண்ட

உம்மையா நடக்கச்செய்வது என பரிதாபமுற்றாராய் அத்திருவடிகளைச் சிரமேற்றாங்கி அவைகளுக்கு யாதொரு கெடுதியுமுண்டாகக் கூடாதென மங்களாசாசனஞ் செய்கின்றார்கள். இத்துணை சிரமத்துடன் என்னிடம் வந்தது பறைகருத்தானோ என எம்பெருமான் வினவ, உம்மைக் காணவேண்டுமென்பதே எங்கள் முழு எண்ணம் எனவும், இடையர்கள்மாட்டு நன்றிப்பற்றுதலைச் செலுத்துதற்பொருட்டே இந்நோன்பில் இழிந்தோமாகையால் அதற்கு உபகரணமாகிய பறையையும் தரவேண்டுமெனவும் வேண்டிக்கொள்கிறார்கள். கண்ணபிரான் தம் பாஞ்சஜந்யத்தையும், பறையையும் கருடக்கொடியையும், அனந்தனையும் அவர்களுக்குத் தருகிறேன் எனக்கூறி, இன்னும் என்ன விரும்புகின்றீர்கள் எனக் கேட்க, எங்கள் நிலைமையை நன்குணராநின்ற நீர் திருவுள்ளம்பற்றி இனி உம்மைவிட்டு யாங்கள் ஒரு நொடிபொழுதும் பிரியாமல் உமது திருவடிகளில் நித்ய கைங்கரியம் பண்ணுவதாகிய எங்கள் விருப்பத்தை எங்ஙனமேனும் தலைக்கட்டிக் கொடுக்கவேண்டுமென பிரார்த்திக்க, எம்பெருமான் அங்ஙனமே செய்வோம் என ஒப்புக்கொள்ளுகின்றார். இது திருப்பாவையின் ஒருவித சுருக்கமாகும்.

இன்னும் சுருக்கக்கூறின் முதலில் எம்பெருமான் திருவடிகளைப் பற்றுக அடைவதற்கேற்ற நோன்பு நோற்பதற்கு வேண்டிய முறைகளை ஏற்படுத்திக்கொண்டு அதற்குக் காரணமாகிய பாகவதத் தன்மையிலுள்ள தோழிகளை எழுப்பி அவர்களைத் துணையாகக் கொண்டு, எம்பெருமானை யடைவதற்கு முந்தி அவர் பரிஜனங்களை விழிக்கச்செய்து, இறைவன் அருளைப் பெறுதற்குப் புருஷகாரபூதையான பிராட்டியைத் துதித்து, பின் எம்பெருமானைக்கண்டு களித்து அவனிடம் பெறவேண்டிய பேற்றையடைய விரும்பி அங்ஙனமே அடைந்ததாகக் கூறுகின்றது. அதாவது ஓர் ஆன்மாவானது தன் ஆன்மப்பொருளை எம்பெருமான் திருவடிகளில் கொண்டு சேஷபூதமாக்கி வைகுண்டத்தில் அழியாப் பேரின்பத்தை யனுபவிப்பதற்கு முன்னர் பல முயற்சிகளைச் செய்து பாகவதரையும், ஆசாரியர்களையும் துணைக்கொண்டு பிராட்டியின் புருஷகாரத்தினால் எம்பெருமானை யடைவதாகும். நிற்க, இனி நம் கோதா பிராட்டியாரின் மணத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

ஸ்ரீ

பிராட்டியாரின் பெருந்தகைமை.

முன் 36-ம் பக்கத்தொடர்ச்சி.

இன்னமும் காருண்யமும் கற்பும் ஒன்றை ஒன்று சிதைத்திடாமல் தற்காத்ததும் ஓர் பெருமையாம். அதாவது உயிர்கள் பக்கல் கருணை மிகுதியினால் இலங்கைச் சிறையில் இராம பிரான் வாராதொழியான் எனும் வன்மையினால் மிக்க பொறையுடன் வீற்றிருக்க, அவ்வளவில் அரக்கன் நாயெனப்புகுந்து பித்தனைப்போலப் பலவாறு காமப் பிதற்றல் பிதற்றி மிகவும் துயர் விளைக்க, அப்பொழுதே உயிர் துறக்கும் ஆணையை யுடையவளாயினும் உயிர் துறந்து பிழைக்கவும் ஒண்ணாதபடி தன்னுயிரும் நாயகனுக்குரிய தாய் தனக்கு சுதந்திரமன்றியில் பராதீநமாயிருப்பதால்

* காயும் கடுஞ்சிலை யென்காகுத் தன்வாரானால்
மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண் பிறந்தே

என்று தளர்வுற்று.

* பெண்பிறந்தாரெய்தும் பெருந்துயர் காண்கிலேனென்று
ஒண்சுடரோன் வாரா தொழிந்தான்.

என்னும்படியான இத்தகைய துயரநிலையில் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்குத் தக்கவழி ஒன்றுளதாயிருக்கவும் அதனைச்செய்திலர். அஃதென்னை யெனின் அளவற்ற அரக்கர்களால் மொய்க்கப் பெற்று குழலிக் கூடெனத்தகும், இலங்கை யினையும், அதனோடு அனைத்துலகங்களையும் எரித்துச் சாம்பராக்க வல்ல சக்தி தமக்கிருந்தும் அதனை உபயோகித்திலர். ஏனெனில் நாயகனது வில் வீரத்திற்குப் பழுதாவதோடு தமமை எவ்விதமான நிலையிலும் எத்தகைய பாதுகாப்பும் தலைவனுக்குரியதே யன்றி தமது பெண் தன்மைக்கு இயல்பல்லாமையாலும் பாரதந்திரியத்துடன் சேர்ந்த கற்பை நிலைபெற விளங்கச் செய்தனர். இதனை

¶ அல்லன் மாக்களி லங்கைய தாகுமோ
எல்லை நீத்த வுலகங்கள் யாவுமென்
சொல்லினால் சுடுவேனது தூயவன்
வில்லினாற்றற்குமா சென்று வீசினேன்.

¶ கம்பர் — சுந்தரகா * திருவா 5-ம் பக். 4-ம் திரு.

என்றருளினர். பிராட்டி ஸ்வசக்தியை விட்டாள். திரௌபதி லஜ்ஜையை விட்டாள். திருக்கண்ணமங்கை யாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான் என்பன, ஸ்ரீ வசன பூஷண வாக்யங்கள் ஈண்டுணரற்பாலது. அரக்கர்களை வேரறுப்பதும், தன்னைச் சிறைமீட்பதும், உலகிற்குள்ள வுறுதுயரொழிப்பதும ஈசற்கே கடன். யானஃதிழைக்கிலே னென்றிருந்தனர். இதுவே உயர்தரமான கற்பினது இலக்கணமாகும். மற்றைப் பெண்மணிகள் தங்களை ரக்ஷித்துக் கொள்வதில் தாங்களே முற்பட்டுளர் என்பதை அந்தந்த சரித்திர வாயிலாய் உணரலாம். இவ்வாற்றால் தாம் இச்சிறையிலிருப்பதே காகுத்த வீரனது கடுங்கோபத்திற்கும் அரக்கரது நாசத்திற்கும் காரணமாதலின் இவ்வழியால் தமது பெருங் கருணையையும், கற்பையும் வெளியிட்டனர். இவர் தம் நிலையினை இராமபிரானிடம் அனுமன் கூறுமிடத்து;

* விற்பெருந் தடந்தோள் வீர வீங்கு நீரிலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்
இற்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை யென்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்

என்று வியந்துரைக்கின்றனன். ஜீவகாருண்யமே எவ்வுலகினும் சிறந்ததல்லவா?

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்
பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள. (திருக்குறள்.]

தம்மை இரவும் பகலும் ஓயாது நலிந்துபோந்த சிறைக்காவல் அரக்கிகளைக் கொல்லவேண்டுமென அனுமன் வரங்கேட்க, மாருதியுடன்மன்றாடி அரக்கிகட்கு அபயமளித்து உலகில்குற்றம்செய்யாதவர் எவரென வாதுவுடன் போதித்த கருணை நிகரற்றதேயாம். இரக்கமிலரக்கிகள் தமக்குச் செய்த கொடுமைகளை அயோத்தி யெய்திய பின்னரும் இறைவனிடம் ஒருகாலும் புகன்றனரில்லை.

சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோராயிற் பொறுப்பது கடனே.

இலங்கைச் சிறையில் தாம் பன்முறை தற்கொலை செய்யப் புகத்தலையாயிருந்து காத்து வந்தனராதலின் இப்பெரு வாழ்வுற்றனர். இன்றுபின் மீண்டு அயோத்தி யெய்தி முடிமணக்கோலம்

---

* கம்பரா — சுந்தரகா.

காண்பதெங்கே. அரசியல் செல்வங்கண்டு ஆனந்திப்பதெங்கே. இதனாலும் இவ்வரக்கிகள் நன்றி செய்தவரென அறிவுற்றனர் போலும். இவ்வாறு உலகின்கண் அவதரித்து உலகினர்க்காகத் தாம் மிக்க துயரங்களை யநுபவித்தும் கருணாதி குணங்களை விளங்கச் செய்த அவதாரப் பெருமையினை

* உழுகின்ற கொழுமுகத்தின் உதிக்கின்ற கதிரொளிபோல்
பொழிகின்ற புவிமடந்தை திருவெளிப்பட்டெனப் புணரி
யெழுகின்ற தெள்ளமுதோ டெழுந்தவளுமிழிந்தொதுங்கித்
தொழுகின்ற நலனலத்துப்பெண்ணரசி தோன்றினள்.

என வருணித்தனர். தேவாசுரர்கள் திருப்பாற்கடலைக் கடைகின்ற காலத்து அமுதாஸத்தின்மீது அவதரித்த மஹாலட்சுமியும், இவரது ரூபம், குணம் முதலிய பெருமைகளுக்கு ஒப்பாகமாட்டாமல் அயலிலே ஒதுங்கித் தொழுதுநிற்கும்படியான ஏற்றத்தினையுடையாரென இப்பாசுரம் விளக்குகின்றது. சூர்ப்பனகை ராவணனிடம் பிராட்டியை வருணிக்குந் துறையில்;

¶ தாமரையிருந்த தையல் சேடியாந்தரமுமல்லள்

எனக் கூறினதும் ஒப்பு நோக்கத்தக்கது. இதே ஸந்தர்ப்பத்தில் கடலில் தோன்றிய இலக்குமியினும் பூமியில் தோன்றிய ஸீதா பிராட்டியார் மேம்பாடுடையவர் என்பதை வான்கால், தீ, நீர், மண் என்னும் ஐம்பெரும் பூதங்களில் ஜலம் மண் என்ற இரண்டு பூதங்களுக்கும் கலகமுண்டாய் ஒன்று மற்றொன்றை வெற்றிக்கொண்டன என்னும கருத்துத் தோன்ற நம் கல்வியில் பெரியராய கம்பர் வெளியிடுகின்றனர்.

¶ தேர்தந்த வல்குல் சீதை தேவர்தமுலகினிம்பர்
வார்தந்த கொங்கையார் தம் வயிறு தந்தாளுமல்லள்
தார்தந்த கமலத்தாளைத் தருக்கினர் கடையச்சங்க
நீர் தந்ததனை வெல்வான் நிலம் தந்த நிரப்பிற்றன்றே.

என்னும் இக்கவியில் பின்னிரண்டடிகளின் கருத்தால் ஜல பூதமாகிய திருப்பாற்கடல் ஸ்ரீ தேவியைத் தந்து சிறப்படைந்திருக்க அதனை வென்று நாம் சிறப்படைய வேண்டுமென எண்ணிய மண்

* கம்பரா பால, ¶ கம்பரா — ஆரண்.

ணாகிய பூதம் தனதிடமாக சீதா பிராட்டியாரைப் பெற்று மிக்க உயர்வடைந்து அதனை வென்று விளங்கின என்பது வெளியாம். இவர் விண்ணுலகத்தினின்றும் மண்ணுலகிலவதரிக்க யாரெல்லாம் தோற்றனாரென்னின்

∴ மலர்மேனின் றிம்மங்கை யிவ்வையத்திடை வைகப்
பலகாலுந் தம்மெய் கனிவாடும்படி தோற்றார்
அலகோ வில்லா வந்தணரோ நல்லறமேயோ
உலகோ வானோரும் பர்கொலோ வீதணரேமால்.

எனவும் நிகழ்த்தினர். இவரது பெருமையினை அகத்தியனார் வழுத்துகின்றார்.

¶ மடற்கமலநறும்பொகுட்டினாசிருக்கும்செந்திருவாய் மயிலையுந்தன்
கடைக்கணருள் பெற்றன்றோ கடல்வண்ணனுலகமெலாங்காவல்பூண்டான்
படைத்தனன நான்முகன் பசுங்குழவி மதிபுனைந்த பரமன்றானும்
துடைத்தனன்னின் பெருமை யாவரே வாய் திறந்து சொல்லவல்லார்.

எனவும்

* சிவனருளடைந்த ராவணன் றன்னையும்
அப்பிரானை நீண்ட மகமேரு வில்லையும்
சிறு துரும்பென்றெடுத்திட்டனை

எனவும் நின்பெருமை உரைக்கடங்காதன வெனவும் புரைத்தார். இப்பிராட்டியாரின் திருவருளால் அரும் பிராயத்தை படைத்துள்ள ஸ்ரீ வைஷ்ணவன் என்னும் ஞானச் செல்வன் மென்மேலும் மிக வளர்ந்து நீடூழி வாழ்வானாக.

% மாரி மாறாத தண்ணம் மலை வேங்கடத் தண்ணலை
வாரி மாறாத பைம்பூம்பொழில் சூழ்குருகூர் நகர்
காரி மாறன் சடகோபன் சொல்லாயிரத்திப்பத்தால்
வேரி மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே.

∴ கம்பரா பால.

¶ காசிகாண்டம்.

* ...

% திருவாய்மொழி 4. ப. 5.

ஸ்ரீ

கீதா வாக்கியங்கள்.

கண்ணன் அருளிச்செய்கின்றார்.

அர்ச்சுனா! இது காறும் யானடைந்த ஜன்மங்களை அளவிட முடியாது. உனக்கும் அவ்வாறே பல ஜன்மங்கள் கழிந்தது. ஆனால் அவையனைத்தையும் யான் அறிவேன். உனக்கு அது தெரியாது. (அத்தி—4. சுலோ. 5.)

....

யான் பிறப்பும் இறப்பும் இல்லாதவனும் எல்லா ஜீவ கோடிகளுக்கும் ஈசுவரனுமிருந்தபோதிலும் எனது கடவுட்டன்மையை யனுசரித்து சொரூப சக்தியாலே அவதரிக்கின்றேன். (அத்தி—4. சுலோ. 6.)

....

எக்தெந்த காலங்களில் தர்மத்திற்கு நீங்கும் அதர்மத்திற்கு விர்த்தியும் ஏற்படுகின்றதோ அக்காலங்களிலெல்லாம் யான் என்னை சிருஷ்டித்துக்கொள்கிறேன் (அத்—4. சுலோ. 7.)

....

சிஷ்டர்களின் ரக்ஷணத்திற்காகவும் துஷ்டர்களின் நாசத்திற்காகவும், தர்மத்தை நிலைபெறச் செய்வதற்காகவும் யான் யுகங்கள் தோறும் அவதரிக்கின்றேன். - (அத்தி—4. சுலோ. 8.)

....

ஏ! அர்ச்சுனா! பிரகிருதி சம்பந்தமில்லாத என்னுடைய அவதாரத்தையும் செய்கையையும் எவன் உண்மையாய் அறிகிறானோ அவன் சரீரத்தைவிட்டபின் மீண்டும பிறவியை யடையமாட்டான். என்னையே அடைகிறான். (அத்—4. சுலோ. 9)

....

இந்தப் பிரகிருதியே பூமி, ஜலம், நெருப்பு, காற்று, ஆகாசம், மனம், புத்தி, அகங்காரம், என எட்டு வகையாய்ப்பிரிந்திருக்கிறது. இப்பிரகிருதி யெல்லாம் என்னிடமிருந்தே உண்டானதாக அறி. அத்தி—7. சுலோ. 4)